www.winmeen.com

**Sl. No.** 575540

**Set No. I**

பதிவு எண் :

# நவராத்திரி

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி ]   [ மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்கு முன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பின் வலதுபுறம், ஓர் ஒட்டுத்தாளால் (Sticker) ஒட்டப்பட்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்காணிப்பாளர் கூறும் வரையில், இந்த ஒட்டுத்தாளைக் (Sticker) கிழித்துத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் இவ்வினாத்தொகுப்பின் வலதுபுறத்தில் உள்ள ஒட்டுத்தாளைக் (Sticker) கவனமாகக் கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத்தொகுப்பு 200 வினாக்களை கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும்.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில், அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர், வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீலம் அல்லது கருமை நிற பந்துமுனைப் பேனாவினால் நீங்கள் எழுத வேண்டும். தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக்காட்ட தவறினால், உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ, அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் [A], [B], [C] மற்றும் [D] என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியெனக் கருதும் விடையை, ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்டு விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் [B] என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   [A] ■ [C] [D]

9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக்கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிட வேண்டும். இவ்வினாதொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப் பக்கத்திற்கு முன் பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
12. வினாத்தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.

[ Turn Over

7. வேதகால கடவுள்கள். அண்டத்தின் ஒழுங்கை மட்டும் அல்லாமல் வேறு பாதுகாவலராகவும் பார்க்கப்படுகின்றவை:

1. வேத விதிகள்
2. அற ஒழுங்கு
3. அற விதி
4. விதி மற்றும் ஒழுங்கு

இதில் எது சரி?

a) 1 மட்டும் சரி
b) 3 மட்டும் சரி
c) 2-ம் 3-ம் சரி
d) 4 மட்டும் சரி

8. ஆன்மா முக்தி நிலையை அடைவதற்கான வழிமுறையைப் பெற விலக்க வேண்டியது :

1. அனந்தம்
2. மனன
3. ப்ரையஸ் மற்றும் ஸ்ரையஸ்
4. அனைத்து ஆசைகளும்

இதில் எது சரி?

a) 4 மட்டும் சரி
b) 3-ம் 1-ம் சரி
c) 2-ம் 3-ம் சரி
d) 3 மட்டும் சரி

9. கீழ்கண்ட இணைகளில் எது பொருத்தமற்றது?

| | நூல் | ஆசிரியர் |
|---|---|---|
| a) | திருவுந்தியார் | உய்யாவந்த தேவர் |
| b) | சிவஞானபோதம் | உமாபதி சிவம் |
| c) | திருவருட்பயன் | உமாபதி சிவம் |
| d) | திருவாசகம் | மாணிக்கவாசகர் |

10. சிவன் எந்த காலகட்டத்திலிருந்து வழிபடப்படுகிறார்?

a) அதர்வ வேத காலம்
b) யஜுர் வேத காலம்
c) உபநிட காலம்
d) புராண காலம்

1. சைவாகமங்களில் சிவனுக்கு எத்தனை குணங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது?

a) 5
b) 6
c) 7
d) 8

2. சைவத்தில் மும்மலத்தாலும் கட்டுற்று இருக்கும் உயிர்களை இவ்வாறாக அழைப்பர் :

a) அஞ்ஞான கலா
b) பிரளயா கலா
c) விஞ்ஞான கலா
d) சகலா

3. ஸ்ரீ வைணவ சம்பிரதாயத்தை நிறுவியவர் :

a) இராமானுசர்
b) வல்லபர்
c) மத்துவர்
d) நாதமுனி

4. கீழ்வருவனவற்றுள் விஷ்ணுவின் வாகனம் / வாகனங்கள் எவை?

1. கருடன்
2. அனந்தநாக்
3. சேஷநாக்
4. சக்கரா

a) 2 மட்டும்
b) 2 மற்றும் 3
c) 1 மட்டும்
d) எதுவும் இல்லை

5. விஷ்ணு வெள்ளை குதிரையில் வருகின்ற அவதாரம் :

1. ராமர்
2. கிருஷ்ணர்
3. நரசிம்மர்
4. கல்கி

a) 1 மட்டும் சரி
b) 2-ம் 3-ம் சரி
c) 4 மட்டும் சரி
d) எதுவும் இல்லை

6. சைவக் கூற்றின்படி பதி என்பவர் 1. உருவமுடையவர் 2. அரூபானவர் 3. அரூப ரூபமானவர்

கீழ்க்கண்ட சொற்றொடர்களில் சரியானதைத் தேர்ந்தெடு :

a) தொடர் 1 மட்டும் சரி
b) தொடர்கள் 1 மற்றும் 2 சரி
c) தொடர் 3 மட்டுமே சரி
d) அனைத்து தொடர்களும் சரியே

[ Turn Over

11. கீழ்கண்ட அட்டவணை Iஐஅட்டவணை IIஉடன் சரிபார்த்து சரியானவற்றைத் தெரிவு செய்க :

| | அட்டவணை I (இடம்) | | அட்டவணை II (பெயர்) |
|---|---|---|---|
| a) | காசி | 1. | கரும்பாய் |
| b) | பண்டரிபுரம் | 2. | சீலாபாய் |
| c) | ஜெகனாதபுரம் | 3. | ராமாபாய் |
| d) | குஜராத் | 4. | ஜனாபாய் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 4 | 2 | 1 | 3 |
| b) | 3 | 4 | 1 | 2 |
| c) | 1 | 3 | 2 | 4 |
| d) | 2 | 4 | 1 | 3 |

12. கோவில்களில் கொடிமரம் பிரதிட்டையின் நோக்கம் :

1. அசுரர்களை அகற்றுவதன் பொருட்டு
2. தேவர்களை பாதுகாக்கும் பொருட்டு
3. பக்தர்களை அழைத்தற் பொருட்டு
4. ஆலயத்தை ரக்ஷித்தற் பொருட்டு

இதில் எது சரி?

a) 1-ம் 2-ம் சரி
b) 2-ம் 3-ம் சரி
c) 3-ம் 4-ம் சரி
d) 1-ம் 4-ம் சரி

13. மாவீரன் அலெக்சாண்டருடன் சம்மந்தப்பட்ட இந்து பண்டிகை எது?

a) விஜயதசமி
b) சங்கராந்தி
c) ரக்ஷாபந்தன்
d) விநாயகர் சதுர்த்தி

14. நம்பியாண்டார் நம்பியின் மறு பெயர் :

a) பக்த பிரகலாதன்
b) அப்பூதியடிகள்
c) பக்தபால பக்தன்
d) எதுவுமில்லை

[ Turn Over

www.winmeen.com

15. இந்து மதம் சார்ந்த பின்வரும் கூற்றுக்கான தீர்வு செய்க :

1. இந்து சமூகத்துவம் இந்துவின் வாழ்வியல் முறையை அடிப்படையாகக் கொண்டது.

2. இந்து சமூகத்துவம் இந்தியாவின் வாழ்வியல் முறையை அடிப்படையாகக் கொண்டது.

இதில் எது சரி?

a) 1 மட்டும் சரி
b) 3 மட்டும் சரி
c) 4 மட்டும் சரி
d) 1-ம் 2-ம் சரியில்லை (அ) தவறு

16. ஆகமத்தைச் சார்ந்த கீழ்வரும் கூற்றாவன :

"ஆகமங்கள் குறிப்பாக இறையருள் பெற்றவர்களுக்கு அருளப் பெற்றது. அது வேத வேதாந்தங்களின் உண்மைகளை உள்ளடக்கியது ஆகும்."

மேற்கண்ட கூற்று யாரால் கூறப்பட்டது?

a) மெய்கண்டார்
b) திருமூலர்
c) மாணிக்கவாசகர்
d) உமாபதி

17. 'இவ்வனைத்தும் ஆத்மன்' என்று கூறும் உபநிடதம் :

a) ஆத்தரேய
b) பிராட்ரான்யக்கா
c) முண்டகா
d) கான்டொயா

18. சால் மரத்தடியில் அமர்ந்து தவமியற்றி ஞானம் அடையப் பெற்ற மகாபுருஷர் :

a) புத்தர்
b) ரிஷப தேவர்
c) குருநானக்
d) மகாவீரர்

19. தவறாக இணைக்கப்பட்டுள்ளது எது?

a) ருத்ரா - புயல் மற்றும் மின்னலின் கடவுள்
b) சோமா - அகத்தூண்டுதலின் கடவுள்
c) இந்திரா - நீதிக்கு உண்டான கடவுள்
d) ப்ராஜன்யா - மழைக்கு உரிய கடவுள்

20. ஒழுக்காற்றுக் கோட்பாடுகளுக்கு அடிப்படையில் இருப்பது :

a) தனி மனிதனின் மதிப்பும் சிறப்பும் b) சமூக உறவின் மதிப்பும் சிறப்பும்

c) அரசியல் உறவின் மதிப்பும் சிறப்பும் d) பொருளாதார உறவின் மதிப்பும் சிறப்பும்

மேற்சொன்ன எந்த கூற்று சரியாக பொருள் தரக்கூடியது?

a) 3 மட்டும் சரி b) 2 மட்டும் சரி

c) 1 மட்டும் சரி d) 4 மட்டும் சரி

21. வேதங்கள் குறிப்பிடாத கடவுளை தெரிவு செய்க :

a) வருணா b) கார்த்திகேயன்

c) இந்திரன் d) அக்னி

இதில் எது சரி?

a) A மற்றும் D மட்டும் b) D மட்டும்

c) A and B மட்டும் d) B மட்டும்

22. மாத்வரின்படி, ஆன்மா இவற்றிலிருந்து வேறுபடுகின்றது :

1. கடவுள் 2. உலகம்

3. இரண்டும் 4. எதுவும் இல்லை

இதில் எது சரி?

a) 1 மட்டும் சரி b) 2 மட்டும் சரி

c) 3 மட்டும் சரி d) 4 மட்டும் சரி

23. உபநிடதங்களின் போதகங்களை இப்படியும் சிலசமயம் அழைக்கப்படும் :

a) வேதோபனிஷத் b) உபாஸனம்

c) வேதாந்த சூத்ரம் d) சுருதிகள்

[ Turn Over

24. இந்து மதப்படி இறப்பு கடவுளான யமன் தன் வாகனமாக வைத்திருக்கிற மிருகம் :

a) எருமை
b) பசு
c) யானை
d) ஒட்டகம்

25. உபநிடதங்கள், பிராமணங்கள் மற்றும் வேதங்கள் ஆகியவை மூன்று ஞான நூல்களாக கருதப்படுவது :

a) வெளிப்படுத்தப்பட்ட உரை நூல்
b) ஏற்புடைய உரை நூல்
c) கடவுள் கொடுத்த உரை நூல்
d) அனுபவம் தந்த உரை நூல்

26. கீழ்கண்ட அட்டவணை I உடன்அட்டவணை IIஐ இணைத்து சரியானவற்றைக் குறிப்பிடுக :

| அட்டவணை I (நூல்கள்) | அட்டவணை II (நூல்களின் எண்ணிக்கை) |
|---|---|
| a) வேதம் | 1. இரண்டு |
| b) இதிகாசம் | 2. ஆறு |
| c) புராணங்கள் | 3. நான்கு |
| d) தரிசனங்கள் | 4. பதினெட்டு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 4 | 2 |
| b) | 2 | 4 | 1 | 3 |
| c) | 1 | 3 | 2 | 4 |
| d) | 4 | 2 | 1 | 3 |

27. சாங்கியம் ஒப்புக் கொள்வது :

a) ஜீவன் முக்தி
b) விதேக முக்தி
c) இரண்டும்
d) எதுவும் இல்லை

28. கீழ்வருவனவற்றுள் சரியானவற்றை பொருத்துக :

| சமயம் | | கடவுள் வடிவம் |
|---|---|---|
| a) | கானபத்யம் | 1. பேரொளி வடிவம் |
| b) | கௌமாரம் | 2. தாய் வடிவம் |
| c) | சாக்தேயம் | 3. ஓங்கார வடிவம் |
| d) | சௌமாரம் | 4. பேரின்ப வடிவம் |

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| a) | 3 | 4 | 2 | 1 |
| b) | 1 | 3 | 2 | 4 |
| c) | 2 | 3 | 1 | 4 |
| d) | 3 | 2 | 4 | 1 |

29. இந்து மதத்தின்படி குழந்தைப் பருவ சடங்குகளாவன :

a) அன்னபிரசன்ன, வித்யாரம்ப, நாமகரண, ஜாதகாரம்ப

b) ஜாதகாரம்ப, நாமகரண, அன்னபிரசன்ன, வித்யாரம்ப

c) நாமகரண, அன்னபிரசன்ன, ஜாதகாரம்ப, வித்யாரம்ப

d) வித்யாரம்ப, ஜாதகாரம்ப, நாமகரண, அன்னபிரசன்ன

இதில் எது சரி?

a) d மட்டும் சரி
b) b மட்டும் சரி
c) c மட்டும் சரி
d) a மட்டும் சரி

30. பூர்வமீமாம்ஸாபடி :

1. ஆன்மாவின் குணங்கள் இச்சையும் வெறுப்பும்
2. ஆன்மா மனதுடன் தொடர்பு கொள்வதால்

இதில் எது சரி?

a) 1 மட்டும் சரி
b) 2 மட்டும் சரி
c) 1-ம் 2-ம் சரி
d) 1 தவறு

[ Turn Over

31. உத்தாலகருக்கும் ஸ்வேதகேதுவிற்கும் இடையே உள்ள உரையாடல் இடம் பெறுவது :

a) கேனோபனிடதம்
b) பிரகதாரண்ய உபநிடதம்
c) சாந்தோக்கிய உபநிடதம்
d) முண்டக உபநிடதம்

32. புருஷ சுக்தத்தில் கூறப்பட்டுள்ளது :

a) வேதஞானிகள் பிரபஞ்சத்திற்கு பின்னால் இருக்கின்ற படைப்பாற்றலைக் கண்டுபிடிக்கும் முயற்சி
b) பிரபஞ்சத்தின் படைப்புப் புதிரை மிக்க தைரியத்தோடு வேத ஞானிகள் கண்டுபிடிக்கும் முயற்சி
c) இரண்டும்
d) எதுவுமில்லை

33. பின்வரும் வரிகளை கவனி :

1. சிவனின் வாகனம் நந்தி
2. அம்பாளின் வாகனம் புலி
3. விநாயகரின் வாகனம் மூஷிகம்

கீழ்வருவனவற்றுள் எது சரி?

a) 1-ம் 2-ம் சரி
b) 1-ம் 3-ம் சரி
c) 2-ம் 3-ம் சரி
d) 1, 2, 3 சரி

34. சாங்கியாவின்படி,

A. புருடர்கள் பல.

R. புருடன் ஒன்றே ஒன்று உலகத்திற்கு, என்றால் பிறப்பு இறப்பு ஒன்றே ஆகும்.

இதில் எது சரி?

a) A சரி
b) A & R சரி
c) A சரி R தவறு
d) A & R தவறு

35. 'உபநிஷத்' என்ற சொல்லில் உள்ள 'உப', 'நி' 'ஷத்' என்ற சொற்றொடர்களின் வேர்ப்பொருள் :

a) 'உப' என்பதற்கு 'பக்தியோடு' என்றும், 'நி' என்பதற்கு 'அருகில்' என்றும், 'ஷத்' என்பது 'உட்காருதல்' எனவும் பொருள்படும்.

b) 'உப' என்பதற்கு 'உட்காருதல்' எனவும், 'நி' என்பதற்கு 'பக்தியோடு' என்றும், 'ஷத்' என்பது 'அருகில்' என்றும் பொருள்படும்.

c) 'உப' என்பதற்கு 'அருகில்' என்றும், 'நி' என்பதற்கு 'பக்தியோடு' என்றும், 'ஷத்' என்பது 'உட்காருதல்' எனவும் பொருள்படும்.

d) உப' என்பதற்கு 'உட்காருதல்' எனவும், 'நி' என்பதற்கு 'அருகில்' என்றும், 'ஷத்' என்பது 'பக்தியோடு' என்றும் பொருள்படும்.

36. சாங்கியாவின்படி, புருடன் :

a) சுத்த உணர்வு

b) செயல் திறன் பெற்றவர்கள்

c) பொருள்

d) எதுவும் இல்லை

37. வேதத்தில் கடவுள் மேல் உள்ள பக்தியையும் அவரது புகழையும் எடுத்துக்காட்ட "ஹீனோதியிஸம்" என்ற வார்த்தையை கொடுத்தவர் :

a) மாக்ஸ் வெப்பர்

b) கார்ல் மாக்ஸ்

c) மாக்ஸ் முல்லர்

d) இதில் எதுவும் இல்லை

38. ஆன்மாவின் ஐந்து மேலுரைகளின் வரிசை முறை :

a) அன்னமயகோசம், பிராணமயகோசம், ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம், மனோமயகோசம்

b) மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், அன்னமயகோசம், ஆனந்தமயகோசம், பிராணமயகோசம்

c) அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம்

d) ஆனந்தமயகோசம், விஞ்ஞானமயகோசம், அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம்

[ Turn Over

39. பொருத்துக :

a) அண்டஜா — 1. பூமியிலிருந்து தோன்றியது

b) ஜீவஜா — 2. வியர்வையிலிருந்து தோன்றியது

c) உத்பிஜ்ஜா — 3. முட்டையிலிருந்து தோன்றியது

d) சுவேதஜா — 4. உயிர்மத்திலிருந்து தோன்றியது

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 4 | 2 |
| b) | 1 | 4 | 3 | 2 |
| c) | 4 | 2 | 1 | 3 |
| d) | 3 | 4 | 1 | 2 |

40. உபநிடதங்கள் குறிப்பிடுவது :

a) சடங்குகளிலிருந்து வேறுபட்ட எண்ணம்

b) பிரபஞ்சக் கோட்பாட்டை உள்ளடக்கியது

c) இரண்டும்

d) எதுவுமில்லை

41. பின்வரும் சூத்திரம் எந்த உபநிடதத்தில் இடம் பெற்றுள்ளது?

"சத்திய ஞானம் அனந்தம் பிரம்ம"

a) பிரகதாரண்ய உபநிஷத்

b) ஈசா உபநிஷத்

c) கதா உபநிஷத்

d) தைத்திரிய உபநிஷத்

42. பாதராயணரின் பிரமசூத்திரத்தின் வேறு பெயர் :

a) வேதாந்த சூத்திரம்

b) சாரீரக சூத்திரம்

c) உத்தர மீமாம்சம்

d) மேலே குறிப்பிட்டவை எல்லாம்

43. பிரம்மனின் தன்மை சாத்வீகமானது எனக் குறிப்பிடுபவர் :

a) கௌடில்யர் b) மனு

c) இருவரும் d) யாருமில்லை

44. பட்டியல் I மற்றும் பட்டியல் IIஐ பொருத்தி விடை காண்க :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| a) | வரதராஜர் | 1. | தஞ்சாவூர் |
| b) | பழமுதிர்சோலை | 2. | காஞ்சிபுரம் |
| c) | ப்ரஹதீஸ்வர கோயில் | 3. | திருவாரூர் |
| d) | தியாகராஜா கோயில் | 4. | அழகர் கோயில் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 2 | 4 | 1 | 3 |
| b) | 2 | 4 | 3 | 1 |
| c) | 4 | 3 | 1 | 2 |
| d) | 3 | 4 | 1 | 2 |

45. வேதத்தின் இறுதியாக உபநிடதங்கள் கருதப்படுவதற்கு காரணம் :

a) வேத தேர்ந்தாராச்சியின் முகடை குறிப்பதினால்

b) பொருள் சார்ந்த வாழ்க்கையின் முகடை குறிப்பதினால்

c) மறுபிறப்பின் முகடை குறிப்பதினால்

d) குடும்ப வாழ்க்கையின் முகடை குறிப்பதினால்

46. தத்துவத்தின் மூலாதாரமாகக் கருதப்படுவது :

a) வேதம் b) கீதை

c) உபநிடதம் d) எதுவுமில்லை

[ Turn Over

47. வேதாந்தம் என்ற சொல்லின் நேர்ப்பொருள் :

a) வேதத்தின் முற்பகுதியைக் குறிக்கிறது
b) வேள்விகளின் தன்மையைப் புரிந்து கொள்ளுதல்
c) வேதத்தின் இறுதிப் பகுதி
d) மேலே குறிப்பிட்டவை எல்லாம்

48. ஆனந்ததீர்த்தர் என்று வேறொரு பெயருடைய இவர் துவைத சித்தாந்தத்தை உருவாக்கினார்?

a) மத்துவாச்சாரியார்
b) வல்லபாச்சாரியார்
c) ஆனந்த கோஸ்வாமி
d) இராமானுஜாச்சாரியார்

49. மருதபிரானை வளர்ப்புப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டவர் :

a) பட்டினத்தார்
b) தாயுமானவர்
c) அருணகிரிநாதர்
d) பாம்பன் சுவாமிகள்

50. வரிசை I மற்றும் வரிசை IIயை பொருத்தி சரியான விடையைத் தருக :

| | வரிசை I | | வரிசை II |
|---|---|---|---|
| a) | பிரத்தியட்சம் | 1. | சொல் சார்ந்த அறிவு |
| b) | அநுமானம் | 2. | பொருளுக்கும் பெயருக்கும் சம்பந்தப்பட்டு வரும் அறிவு |
| c) | உபமானம் | 3. | ஓர் அறிவிலிருந்து வரும் மற்றொரு அறிவு |
| d) | ஆப்த வாக்கியம் | 4. | பொருள்களும் புலன்களும் சம்பந்தப்பட்டு வரும் அறிவு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 1 | 2 | 4 | 3 |
| b) | 2 | 4 | 1 | 3 |
| c) | 3 | 2 | 4 | 1 |
| d) | 4 | 3 | 2 | 1 |

51. வேதகால புராண இலக்கியத்தில் சில சமயங்களில் சூரியனை கடவுளின் கண்களாக கவிதை நயத்துடன் வர்ணிக்கப்படுவது :

a) இந்திரா
b) மிட்ரா
c) அக்னி
d) வருணா

52. நியாயாவின்படி கடவுள் :

1. படைப்பவர்
2. காப்பவர்
3. அழிப்பவர்
4. எதுவும் இல்லை

a) I மட்டும் சரி
b) 1-ம் 2-ம் சரி
c) 1, 2, 3 சரி
d) 4 மட்டும் சரி

53. உடலில் இயங்கும் ஐந்து காற்று சக்திகளாவன :

a) உதான, சமான, விசுதா, பிராண, அபான
b) விசுதா, பிராண, அபான, உதான, சமான
c) அபான, பிராண, உதான, சமான, விசுதா
d) பிராண, அபான, விபான, உதான, சமான

54. திருமூலர் வாழ்ந்த இடம் :

a) திருவண்ணாமலை
b) சீர்காழி
c) சிதம்பரம்
d) திருப்பரங்குன்றம்

55. பட்டியல் I மற்றும் பட்டியல் IIஐ பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்யவும் :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| a) | சாலோக்கியம் | 1. | கடவுள் அருகில் |
| b) | சாம்ப்பியம் | 2. | புறத்தோற்றம் கொண்டிருத்தல் |
| c) | சாருப்யம் | 3. | கடவுளுடன் குடியிருத்தல் |
| d) | சாயுஜ்யம் | 4. | கடவுளின் உடம்பிற்குள் புகுதல் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 1 | 2 | 3 | 4 |
| b) | 2 | 3 | 4 | 1 |
| c) | 3 | 1 | 2 | 4 |
| d) | 4 | 3 | 2 | 1 |

56. பௌதித தசெனத்தில் காரணகாரியக் கோட்பாட்டைச் சார்ந்து உள்ள கொள்கைகள் :

a) பிரதித்ய சமுத்பாகம்
b) ஷனிக்கபாதம்
c) இரண்டும்
d) எதுவுமில்லை

57. சீவக சிந்தாமணி நூலை அளித்தவர்கள் இந்த சமயத்தைச் சார்ந்தவர்கள் :

a) பௌத்தம்
b) சாருவாகம்
c) காபாலிகம்
d) சமணம்

58. கீழ்கண்ட குழுவில் சேராத ஒன்று :

a) மெய்கண்டார்
b) அருள்நந்தி சிவம்
c) மறைஞான சம்பந்தர்
d) சிவப்பிரகாசர்

59. நியாயாவின் கூற்றுப்படி உலகம் :

a) எண்ணங்களைச் சாராதது
b) எண்ணங்களைச் சார்ந்தது
c) இரண்டும்
d) எதுவும் இல்லை

60. கீழ்வருவனவற்றுள் சரியானவற்றை பொருத்துக :

| | (நூல்) | | (ஆசிரியர்) |
|---|---|---|---|
| a) | மாண்டுக்யகாரிகை | 1. | பாதராயனர் |
| b) | வேதாந்த சூத்திரம் | 2. | சதானந்தர் |
| c) | வேதாந்த சாரம் | 3. | தர்மராஜதுவேந்திரன் |
| d) | வேதாந்த பரிபாசம் | 4. | கௌடபாதர் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 2 | 4 |
| b) | 4 | 2 | 1 | 3 |
| c) | 2 | 1 | 4 | 3 |
| d) | 4 | 1 | 2 | 3 |

61. கீழ்வருவனவற்றை பொருத்தி, சரியான பதிலைத் தே

a) ராம – நவமி – கடல் தேவதையின் பிறப்பு
b) ரத – யாத்திரை – ஜகன்னாதரின் தேர்
c) அப்ஸரஸ் – இராமரின் பிறந்த நாள்
d) ஹோலி – வசந்தகால பண்டிகை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 2 | 4 |
| b) | 3 | 2 | 1 | 4 |
| c) | 1 | 4 | 3 | 2 |
| d) | 2 | 4 | 3 | 1 |

62. கீதை அழுத்தமாகக் கூறுவது :

www.winmeen.com

a) துறவறம்
b) சுயதர்மம்
c) செயல்கள்
d) இவை அனைத்தும்

63. பட்டியல் I மற்றும் பட்டியல் IIஐ பொருத்தி சரியான விடை காண்க :

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| a) ஸ்ரீ சம்பிரதாயம் | 1. விஷ்ணுவாமி |
| b) பிரம்ம சம்பிரதாயம் | 2. நிம்பார்க |
| c) ருத்ர சம்பிரதாயம் | 3. மத்வர் |
| d) கனக சம்பிரதாயம் | 4. இராமானுசர் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 4 | 3 | 1 | 2 |
| b) | 3 | 4 | 1 | 2 |
| c) | 4 | 2 | 3 | 1 |
| d) | 2 | 4 | 3 | 1 |

64. மூவர்கம் எதைக் குறிக்கின்றது?

a) மோட்சம், தர்மம், அர்த்தம்
b) தர்மம், காமம், மோட்சம்
c) காமம், அர்த்தம், தர்மம்
d) காமம், அர்த்தம், மோட்சம்

[ Turn Over

65. வைஷ்ணவர்களை பொறுத்தவரை வேதத்திற்கு இணையானது மற்றும் 'தமிழ் வேதம்' என்று அழைக்கப்படுவது :

a) பிரபந்தம்
b) வைக்கனாஸ ஆகமம்
c) திருவாய்மொழி and பிரபந்தம்
d) திருப்பாவை

66. கீழ்வரும் வாக்கியங்களை ஆராயவும் :

1. விஷ்ணு, நாராயணா மற்றும் வாசுதேவனை ஒரே கடவுளாக தைத்ரேய உபநிடதத்தில் பாவிக்கப்படுகிறார்கள்.

2. தர்மம் சரிந்து அதர்மம் உயர்ந்தால் மறு அவதாரம் எடுத்து தர்மத்தை நிலை நாட்டுவேன் என்று கிருஷ்ணர் கூறுகிறார்.

இதில் எது சரி?

a) 1 மட்டும் சரி
b) 2 மட்டும் சரி
c) 1-ம் 2-ம் சரி
d) 1-ம் 2-ம் சரியில்லை

67. கீழே கொடுக்கப்பட்டுள்ளதை பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்யவும் :

a) லேக்ஹா — 1. வரைகலை மற்றும் ஓவியக்கலை
b) ரூப்பா — 2. கணிதவியல்
c) காணன — 3. வாசித்தல் மற்றும் எழுதுதல்
d) சம்சக்ரிடி — 4. கணக்கிடுதல் மற்றும் வடிவியல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 4 | 2 |
| b) | 3 | 4 | 2 | 1 |
| c) | 3 | 2 | 4 | 1 |
| d) | 4 | 2 | 3 | 1 |

68. சைவ ஆகமம் தொடர்புடையது :

a) தந்திரங்கள்
b) பிரார்த்தனை
c) தியானம்
d) எல்லாம்

69. வைணவப் பிரிவுகளை மனதில் கொண்டு பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| a) | சைதன்யா | 1. | நியே வைணவம் - அஸ்ஸாம் |
| b) | சுவாமி பிரபுபாதா | 2. | வைணவம் – வங்காள பிரிவு |
| c) | சங்கர தேவா | 3. | மகாராஷ்ட்ராவின் பக்திப் பிரிவு |
| d) | ஞானேஸ்வரா | 4. | ISKON |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 2 | 4 | 1 | 3 |
| b) | 2 | 1 | 3 | 4 |
| c) | 2 | 3 | 4 | 1 |
| d) | 4 | 3 | 2 | 1 |

70. பஞ்சார்வ ஆகமத்தின்படி கடவுள் ஐந்து நிலையில் இருக்கிறார். அவற்றுள் இங்கு சரியாக பொருத்தப்படாத நிலை :

a) பரா : வைகுண்டத்தில் இருக்கும் கடவுள்

b) வாசுதேவ வியுஹா : ஆதிசேஷன் மீது சயனம் கொண்டுள்ள லக்ஷ்மி நாராயணா

c) விப்பால : பூமியில் கடவுளின் அவதாரங்கள்

d) அனிருத்த வியுஹா : அழித்தலை பார்த்துக் கொள்ளும் கியானா மற்றும் பாலா

71. கீழ்வரும் வாக்கியங்களை ஆராயவும் :

1. ரிஷிகள் ஆத்மானுபாவத்தை கடைபிடிப்பதால் கிரஹஸ்தர்களை விட உயர்ந்தவர்கள்.

2. ஆழ்வார்கள் திருவெளிப்பாடு அடைந்தவர்கள். ஆதலால் இவர்கள் ரிஷிகளை விட உயர்ந்தவர்கள்.

இதில் எது சரி?

a) 1 மட்டும் சரி

b) 2 மட்டும் சரி

c) 1-ம் 2-ம் சரி

d) 1-ம் 2-ம் சரியில்லை

72. இராமானுசரின் கூற்றுப்படி பந்தத்திற்கு காரணம் :

a) பிழம்புருவம்

b) கர்மம்

c) அவித்தியம்

d) தவறான உலக சிந்தனை

[ Turn Over

73. கீழ்கண்ட உரைகளை ஆய்க :

1. சுந்தரரின் பெயர் நான்கு : நம்பியாரூரன், தம்பிரான் தோழன், வன்தொண்டன், ஆரூரன்

2. நம்மாழ்வார் பெயர் நான்கு : சடகோபன், மாறன், நம்சடகோபன், பராங்குசன்

எந்த உரை / உரைகள் சரியானது?

a) 1 மட்டும் சரி
b) 2 மட்டும் சரி
c) 1-ம் 2-ம் சரி
d) 1-ம் 2-ம் சரியில்லை

74. திருவாசகத்தின் வேறு பெயர் :

a) தமிழ் வேதம்
b) சைவ வேதம்
c) மேலே உள்ள இரண்டும்
d) மேலே உள்ள எதுவுமில்லை

75. யமுனாச்சார்யாரின் சீடரான 'மரநெறி நம்பி'க்கு இறுதி சடங்குகள் செய்தவர் :

a) பெரியாழ்வார்
b) ஸ்ரீ எம்பார்
c) பெரிய நம்பி
d) நம்மாழ்வார்

76. 'ஸ்தோத்திர ரத்னா'வை எழுதியவர் :

a) யமுனா
b) ராம மிஷ்ரா
c) ஈஸ்வர முனி
d) இராமானுஜர்

77. வைணவ இலக்கியங்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அது தோன்றிய காலத்தை வைத்து சரியான ஒன்றைக் கூறுக :

a) வேதங்கள், ஆகமங்கள், இராமாயணம், புராணங்கள்
b) இராமாயணம், ஆகமங்கள், புராணங்கள், வேதங்கள்
c) வேதங்கள், இராமாயணம், புராணங்கள், ஆகமங்கள்
d) வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இராமாயணம்

78. ஆழ்வார்களுடைய 4000 பாடல்களுக்கான விளக்கவுரை முதன்முதலில் எழுதியவர் :

a) பெரியவாச்சான் பிள்ளை
b) வேதாந்த தேசிகர்
c) நாஞ்சியார்
d) குருகேசர்

79. கீழ்கண்ட உரைகளை ஆய்க :

1. பஞ்சபூதத் தலம் : திருக்காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை, திருக்காளத்தி, திருச்சிற்றம்பலம்

2. திருமாலின் ஐந்து ஆயுதங்கள் : சங்கு, சக்கரம், வாள், கோதண்டம், கதை, ஐம்படை

எந்த உரை / உரைகள் சரியானது?

a) 1 மட்டும்

b) 2 மட்டும்

c) இரண்டும் சரி

d) இரண்டும் சரியில்லை

80. பிற்காலத்தில் வைணவ கருத்துக்களை மற்ற தத்துவங்களில் இருந்து காக்க தொகுத்து வகைப்படுத்தி வழங்கியவர்கள் :

1. தேசிகாச்சாரி

2. நாதமுனி

3. யமுனாச்சாரி

4. இராமானுஜர்

கீழ்கண்டவற்றில் சரியான ஒன்றைத் தேர்ந்தெடு :

a) 4 ஆச்சாரியர்களும்

b) 1, 2 மற்றும் 3

c) 3 மற்றும் 4

d) 2, 3 மற்றும் 4

81. கீதையின் கூற்றுப்படி உள்ளச் சமநிலை என்பது :

1. அறப்பண்பு

2. நேர் மனப்பான்மை

3. கருத்தின்மை

4. உணர்களுக்குட்பட்ட பற்று

கீழ்கண்டவற்றில் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :

a) 1 மற்றும் 2 சரி

b) 1, 2 மற்றும் 3 சரி

c) 3 மற்றும் 4 சரி

d) அனைத்தும் சரியே

82. திருஞானசம்பந்தரால் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றப்பட்ட அரசன் :

a) அதிவீரராம பாண்டியன்

b) ஜெகவீர பாண்டியன்

c) கூன் பாண்டியன்

d) மேலே உள்ள யாரும் இல்லை

[Turn Over

83. Assertion (A) : சைவத்தில் சிவனின் சக்தி அல்லது அருள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

Reason (R) : 1. ஏனெனில், சிவனின் அருள் (அ) சக்திதான் ஆன்மாவின் தளையை நீக்கி மோட்சத்தை அளிக்கிறது.

a) A மற்றும் R சரியே. மேலும் R சரியான விளக்கமாக Aவிற்கு அமைகிறது.

b) A மற்றும் R சரியல்ல

c) A சரி ஆனால் R சரியான விளக்கமாக அமையவில்லை

d) A மற்றும் R இரண்டும் சரியல்ல

84. பொதுவாக சிவன் கோவிலில் கருவறைக்கு முன் அமைந்துள்ள பல்வேறு அமைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை சரியாக வரிசைப்படுத்து.

1. நந்தி

2. துவஜஸ்தம்பம்

3. தீபஸ்தம்பம்

4. பலிபீடம்

a) 1, 2, 4, 3

b) 1, 3, 4, 2

c) 1, 4, 3, 2

d) 1, 2, 3, 4

85. கீழ்கண்ட உரைகளை ஆய்க :

1. குணம் மூன்று : சத்துவம், ராஜசம், தாமசம்

2. காரணம் மூன்று : முதல் காரணம், இடைக் காரணம், கடைக் காரணம்

எந்த உரை / உரைகள் சரியானது?

a) 1 மட்டும் சரி

b) 2 மட்டும் சரி

c) 1-ம் 2-ம் சரி

d) 1-ம் 2-ம் சரியில்லை

86. கீழ்கண்ட வினாக்களில் எது பொருத்தமற்றது?

| | நூல் | ஆசிரியர் |
|---|---|---|
| a) | சிவஞான சித்தியார் | அருள் நந்தி |
| b) | இருபா இருபது | உமாபதி சிவம் |
| c) | வினா வெண்பா | உமாபதி சிவம் |
| d) | திருக்களிற்றுப்படியார் | உய்யாவந்த தேவர் |

87. கீழ்வருவனவற்றுள் சரியாகப் பொருந்தாதது?

a) தட்சிணமூர்த்தி – தெற்கு

b) பிரம்மா – வடக்கு

c) கணபதி – கிழக்கு

d) விஷ்ணு – மேற்கு

88. I. சைவக் கூற்றுப்படி மாயை பொருள் காரணமாக அமைகிறது.

II. எனவே, கடவுள் (பதி) உலகத்தைப் படைக்கும் ஆற்றல் உடையவர்.

மேற்கண்ட தொடர்களிலிருந்து கீழ்காணும் சரியான விடையைத் தேர்ந்தெடு :

a) I மற்றும் II சரியே. தனித்தனியாக

b) I சரி ஆனால் II தவறு

c) I தவறு ஆனால் II சரி

d) இரண்டும் தவறு

89. ஆணவ மலம் அநாதிதொட்டே ஆன்மாவைப் பற்றி நிற்கிறது என்று சைவம் கூறுகிறது. அதனால் எதை இவ்வாறு குறிப்பிடலாம்?

1. சகச மலம்
2. மூல மலம்
3. கன்ம மலம்
4. மாய மலம்

இதன் அடிப்படையில் கீழ்கண்டவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடு :

a) 1 மட்டும் சரி
b) 1-ம் 2-ம் சரி
c) 1-ம் 3-ம் சரி
d) நான்குமே சரி

90. சிவஞான முனிகள் சிவஞானபோதத்திற்கு எழுதிய உரையின் பெயர் :

a) சிவஞான சித்தியார்
b) சிசஞான மாபாடியம்
c) உண்மை விளக்கம்
d) மேலே உள்ள எல்லாம்

91. கீதை போதிப்பது :

1. தனி மனித அறயியல்
2. சமுதாய அறயியல்
3. செயல்களை துறத்தல்
4. வாழ்க்கையைத் துறத்தல்

கீழ்கண்டவற்றில் சரியானதைத் தேர்ந்தெடு :

a) 1 மட்டும் சரி
b) 2 மட்டும் சரி
c) 3-ம் 4-ம் சரி
d) நான்குமே

[ Turn Over

92. பட்டியல் I மற்றும் பட்டியல் IIஐ பொருத்தி சரியான விடையைத் தருக :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| a) | சங்கு | 1. | புற வழிபாடு |
| b) | சக்கரம் | 2. | எண்ணத்தை வெளிப்படுத்தல் |
| c) | பாஹ்ய ஆராதனா | 3. | பஞ்ச ஜயை |
| d) | சங்கல்பம் | 4. | சுதர்சனம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 4 | 1 | 2 |
| b) | 3 | 1 | 4 | 2 |
| c) | 3 | 2 | 4 | 1 |
| d) | 2 | 4 | 1 | 3 |

93. பொருத்துக : மோட்சம் அடையும் வழிகள் :

| | தத்துவ பிரிவுகள் | | வழிகள் |
|---|---|---|---|
| a) | சைவ சித்தாந்தம் | 1. | பக்தி |
| b) | வைணவம் | 2. | ஞானம் |
| c) | மீமாம்சம் | 3. | கடமை |
| d) | கீதை | 4. | யாகங்கள் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 2 | 1 | 4 | 3 |
| b) | 2 | 3 | 4 | 1 |
| c) | 1 | 3 | 4 | 2 |
| d) | 4 | 3 | 2 | 1 |

94. சைவம் ஏற்றுக்கொள்ளும் 'பொருள்கள்' என்ற தலைப்பில் கீழ்கண்டவற்றில் பொருந்தா ஒன்று :

a) பதி
b) ஆணவம்
c) கன்மம்
d) துரியா

95. சிரவணபேளகொளாவில் உள்ள 59 அடி உயர கோமட்டீஸ்வரர் சிலை எந்த சமயக்கலைக்கு சிறப்பு ஊட்டுபவை :

a) பௌத்தம்
b) வீரசைவம்
c) சாருவாக்கம்
d) சமணம்

96. வேதங்களின் பல்வேறு பகுதிகளின் வரிசை முறையே ...

a) பிராமணங்கள், ஆரண்யகங்கள், மந்திரங்கள், உபநிடதங்கள்
b) மந்திரங்கள், பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள்
c) உபநிடதங்கள், மந்திரங்கள், ஆரண்யகங்கள், பிராமணங்கள்
d) பிராமணங்கள், மந்திரங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள்

97. எல்லா உலகங்களும் ஒரே காலத்தில் அழியும் என ஆன்றோர் கூறுவர். இது,

a) அநிர்வசனியம்
b) மகாசங்காரம்
c) சர்வநாசம்
d) சூரசங்காரம்

98. மத்வர் ஆதரிப்பது :

a) சத்காரிய வாதம்
b) அசத்காரிய வாதம்
c) சதசத்காரிய வாதம்
d) விவாத வாதம்

99. நம்பிள்ளை, நஞ்சீயர், வியாக்கியானச் சக்கரவர்த்தி எனப் புகழ் பெற்றவர் :

a) பிள்ளை லோகாசாரியார்
b) நம்பூதிப் பிள்ளை
c) பெரியவாச்சான் பிள்ளை
d) ஆவுடைப்பிள்ளை

100. சைவ சிந்தாந்தக் கொள்கைபடி உயிர் அநாதிதொட்டே கட்டுண்டு அல்லற்படுவதற்கு காரணம் :

a) மாய மலம்
b) கர்ம மலம்
c) ஆணவ மலம்
d) அனைத்தும்

101. கீழ்கண்ட குழுவில் சேராத ஒன்று :

a) அஷ்டபந்தனம்
b) குடமுழுக்கு
c) மகாபிஷேகம்
d) நித்திய பூசை

[ Turn Over

102. கீழ்கண்ட அட்டவணை I-ல் அட்டவணை II-ஐ இணைத்து சரியானவற்றைச் சேர்க்கவும் :

| அட்டவணை I | | அட்டவணை II | |
|---|---|---|---|
| a) | யக்ஞம் | 1. | தவம் |
| b) | அத்யாயனம் | 2. | அர்ப்பணிப்பு |
| c) | தானம் | 3. | படிப்பு |
| d) | தபஸ் | 4. | தியாகம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 2 | 4 | 3 | 1 |
| b) | 3 | 4 | 2 | 1 |
| c) | 4 | 2 | 1 | 3 |
| d) | 4 | 3 | 2 | 1 |

www.winmeen.com

103. கீழ்கண்ட வைணவ ஆசாரியர்கள், அவர்கள் வாழ்ந்த காலத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்திய ஒன்றை தேர்ந்தெடு :

a) இராமானுஜர், யமுனாச்சாரியார், வேதாந்த தேசிகர், பெரியவாச்சான் பிள்ளை

b) யமுனாச்சாரியார், இராமானுஜர், பெரியவாச்சான் பிள்ளை, வேதாந்த தேசிகர்

c) வேதாந்த தேசிகர், இராமானுஜர், யமுனாச்சாரியார், பெரியவாச்சான் பிள்ளை

d) வேதாந்த தேசிகர், பெரியவாச்சான் பிள்ளை, யமுனாச்சாரியார், இராமானுஜர்

104. நாதமுனியின் பேரனின் பெயர் :

a) ஈஸ்வர முனி
b) ராமமிஸ்ரா
c) புன்டரிகக்ஷா
d) யமுனா

105. வைணவர்கள், சைவர்கள் மற்றும் சாக்தர்கள் இவர்களுடைய வெவ்வேறு புனித இலக்கியத்தின் பெயர் :

a) ஆகமம்
b) சம்ஹிதா
c) தந்திரம்
d) வேதம்

106. ஓம் என்னும் அசையை அழைக்கும் வேறு விதம்?

a) மார்டியா

b) பிரணவா

c) ஸ்வர்கா

d) பாதாலா

107. பரம்பொருளின் பல்வேறு நிலைகள் :

a) பிராதிபாசிக சத்யம்

b) வியாவகாரிக சத்யம்

c) இரண்டும்

d) எதுவுமில்லை

108. 'சபிரபஞ்சம்' என்பது :

a) இயற்கை முழுவஸ்தயும் குறிக்கிறது

b) இயற்கை நீங்கலாகக் குறிக்கிறது

c) இரண்டையும்

d) எதுவுமில்லை

109. ஒருவருக்கு இந்து மதம் விளக்கும் மூன்று முக்கிய கடன்(rituals)கள் :

a) ரிஷிகடன், மூதாதையர்கடன், தேவக்கடன்

b) ரிஷிகடன், மூதாதையர்கடன், சகோதரக்கடன்

c) தேவக்கடன், ரிஷிகடன், சகோதரக்கடன்

d) சகோதரக்கடன், தேவக்கடன், மூதாதையர்கடன்

110. தட்சணாமூர்த்தி என்று அழைக்கப்படுவது :

a) வருணன்

b) கிருஷ்ணன்

c) முருகன்

d) சிவன்

111. எத்தனை நாட்கள் ஆருத்ரா தரிசனம் சிதம்பரம் நடராஜர் கோவிலில் நடைபெறும்?

a) 3 நாட்கள்

b) 7 நாட்கள்

c) 11 நாட்கள்

d) 10 நாட்கள்

112. சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு பொற்கூரை வேய்ந்த அரசன் :

a) இராஜராஜ சோழன்

b) கரிகால் சோழன்

c) பராந்தக சோழன்

d) மேலே உள்ள யாரும் இல்லை

[Turn Over

113. கீழ்கொடுக்கப்பட்டுள்ள புருஷார்த்தம் சார்ந்த கண்ட அட்டவணை I-ஐ அட்டவணை II-உடன் பொருத்தி சரியான வரிசையில் தீர்வு செய்க :

| அட்டவணை I (சொல்) | | அட்டவணை II (பொருள்) | |
|---|---|---|---|
| a) | தர்மம் | 1. | பொருள்சார்ந்த நல்வாழ்வு |
| b) | அர்த்தம் | 2. | இன்பம் |
| c) | காமம் | 3. | அறம் |
| d) | மோக்ஷம் | 4. | முடிவு (அ) நிறைவு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 2 | 4 |
| b) | 1 | 2 | 3 | 4 |
| c) | 2 | 3 | 4 | 1 |
| d) | 4 | 2 | 1 | 3 |

114. கீழ்கண்ட அட்டவணை I-ல் அட்டவணை II-உடன் இணைத்து தீர்வு காண்க :

| அட்டவணை I (பூதங்கள்) | | அட்டவணை II (புலன்கள்) | |
|---|---|---|---|
| a) | ஆகாயம் | 1. | கண் |
| b) | காற்று | 2. | தோள் |
| c) | நெருப்பு | 3. | நாக்கு |
| d) | நீர் | 4. | காது |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 4 | 2 | 1 | 3 |
| b) | 4 | 3 | 2 | 1 |
| c) | 1 | 4 | 2 | 3 |
| d) | 4 | 1 | 2 | 3 |

115. அசுவமேத யாகத்தை நடத்த வேண்டியவர் :

a) பிராமணர் b) க்ஷத்திரியர்

c) வைசியர் d) சூத்திரர்

116. கீழ்வருவனவற்றுள் சரியானவற்றை பொருத்துக :

a) தேஜஸ் 1. வெளி

b) அப்பு 2. பூமி

c) பிரிதிவி 3. நெருப்பு

d) ஆகாசம் 4. நீர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 1 | 3 | 4 | 2 |
| b) | 4 | 2 | 3 | 1 |
| c) | 2 | 4 | 1 | 3 |
| d) | 3 | 4 | 2 | 1 |

117. கீழ்கண்ட அட்டவணை I-ல் அட்டவணை II-உடன் பொருத்தி தீர்வு காண்க :

| அட்டவணை I (இடம்) | அட்டவணை II (பெயர்) |
|---|---|
| a) உதய்பூர் | 1. ஸ்ரீ ஆண்டாள் |
| b) ஸ்ரீ வில்லிபுத்தூர் | 2. கானோபத்தரை |
| c) காரைக்கால் | 3. மீரா |
| d) மங்களபடா | 4. புனிதவதி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 4 | 2 |
| b) | 3 | 4 | 2 | 1 |
| c) | 3 | 1 | 2 | 4 |
| d) | 1 | 3 | 4 | 2 |

118. வேதாந்த சூத்திரத்தின் ஆசிரியர் :

a) போதாயணர்
b) பாதராயணர்
c) போதிசத்துவர்
d) மேலே குறிப்பிட்ட யாரும் இல்லை

119. கீழ்வருவனவற்றுள் சரியானவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| a) | அன்னம் | 1. | உயிர் |
| b) | பிராணம் | 2. | இன்பம் |
| c) | விஞ்ஞானம் | 3. | உடல் |
| d) | ஆனந்தம் | 4. | அறிவு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 2 | 1 | 4 |
| b) | 3 | 1 | 4 | 2 |
| c) | 2 | 1 | 3 | 4 |
| d) | 1 | 4 | 2 | 3 |

120. பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| a) | ஜாக்ரதம் | 1. | கனவு |
| b) | ஸ்வப்னம் | 2. | எப்பொழுதும் விழித்திருக்கின்ற உயர்ந்த உணர்வு |
| c) | சுசுப்தி | 3. | விழிப்பு நிலை |
| d) | துரியம் | 4. | ஆழ்ந்த உறக்கம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 1 | 4 | 2 |
| b) | 1 | 2 | 4 | 3 |
| c) | 3 | 2 | 4 | 1 |
| d) | 4 | 3 | 2 | 1 |

121. வேதங்கள் இப்படி அழைக்கப்படுகின்றன :

a) ஸ்மிருதிகள்
b) ஸ்ருதிகள்
c) தர்சனங்கள்
d) இதிகாசங்கள்

122. வேதத்தைப் பற்றிய பின்வரும் வாக்கியங்களை ஆராய்ந்து தெரிவு செய்யவும் :

a) வேதங்கள், சம்கீதா, ஆரிண்யங்கா, உபநிடதம் மற்றும் பிராமணங்களை கொண்டது.
b) வேதங்கள், சம்கீதா, பிராமணங்கள், ஆரிண்யங்கா மற்றும் உபநிடதங்கள் கொண்டது.
c) வேதங்கள், பிராமணங்கள், சம்கீதா, உபநிஷத் மற்றும் ஆரிண்யங்கம் கொண்டது.
d) வேதங்கள், ஆரிண்யங்கா, பிராமணங்கள், உபநிஷத் மற்றும் சம்கீதா கொண்டது.

a) 4 மட்டும் சரி
b) 2 மட்டும் சரி
c) 1 மட்டும் சரி
d) 3 மட்டும் சரி

123. சாண்டில்ய வித்யா என்ற பிரிவு உள்ள உபநிடதம் :

a) கதா உபநிடதம்
b) பிரஸ்ன உபநிடதம்
c) சாந்தோக்கிய உபநிடதம்
d) அய்த்தரேய உபநிடதம்

124. கீழ்கண்டவற்றில் சரியானவற்றைப் பொருத்துக :

a) அன்னமயகோசம் — 1. உணர்வுக்கவசம்
b) பிராணமயகோசம் — 2. இன்பக்கவசம்
c) விஞ்ஞானமயகோசம் — 3. வாயுக்கவசம்
d) ஆனந்தமயகோசம் — 4. உடல்கவசம்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 3 | 2 | 1 | 4 |
| b) | 2 | 1 | 3 | 4 |
| c) | 3 | 4 | 1 | 2 |
| d) | 1 | 4 | 3 | 2 |

[ Turn Over

125. சாக்கியர்களின்படி,

1. ப்ரகுருதியை பிரதானம் என்று கருதலாம்

2. அதிலிருந்து பரிணாமம் தொடர்கிறது

a) 1 சரி 2 தவறு

b) 1-ம் 2-ம் சரி

c) 1 தவறு 2 சரி

d) 1-ம் 2-ம் தவறு

126. கீழ்கண்ட குழுவில் சேராத ஒன்று?

a) நாகரம் - வடக்கத்திய முறை

b) திராவிடம் - தெற்கத்திய முறை

c) வேசரம் - இரண்டும் கலந்தது

d) கர்ப்ப நியாசம் - நிலத்திற்கு உயிரூட்டுதல்

127. கொஞ்சும் மொழியில் ஆண்டாள் அருளிச் செய்தவை :

a) திருவெம்பாவை

b) திருப்பாவை

c) திருமந்திரம்

d) திருப்பல்லாண்டு

128. 'நியத கர்மா' என்பது :

a) ஒருவர் தம் சகோதரரின் கடமையைச் செய்வது

b) ஒருவர் தம் வினைக் கடமையைச் செய்வது

c) ஒருவர் மற்றவரின் கடமையைச் செய்வது

d) ஒருவர் தம் தாய் தந்தையரின் கடமையைச் செய்வது

129. கீழ்வரும் வரிகளை கவனித்து விடை தருக :

1. ரிக்வேதத்தில் சிவன் ருத்திமாக காட்சியளிக்கிறார்.

2. ரிக்வேதத்தில், விஷ்ணு உதாரண குணமுள்ளவராகவும், சூரியக் கடவுளாகவும், மாவீர கடவுளாகிய இந்திரனுடன் இணைக்கப்படுகின்றார்.

இதில் எது சரி?

a) 1 மட்டும் சரி

b) 2 மட்டும் சரி

c) 1 மற்றும் 2 சரி

d) 1 மற்றும் 2 சரியில்லை

130. 'கர்ம பூமி' என்பதன் பொருள் :

a) சுகம் அனுபவிக்க

b) வினை செய்ய

c) சம்பாதிக்க

d) துன்பம் அனுபவிக்க

131. இரமணதேவர் வாழ்ந்த இடம் :

a) திருவண்ணாமலை
b) அழகர் மலை
c) பழனி மலை
d) எதுவும் இல்லை

132. பட்டினத்தாருக்கு சிவபெருமான் தந்த பெட்டியில் இருந்தது?

a) ஸ்படிக லிங்கம்
b) மரகத பிள்ளையார்
c) இரண்டும்
d) எதுவுமில்லை

133. 'சம்ஹிதா' குறிப்பிடுவது :

a) வேதத்தில் உள்ள பாசுரங்களின் தொகுப்பு
b) பிராமணாஸ்
c) வேதங்களின் நிறைவு பகுதி
d) வேதத்தில் உள்ள முதற்படிவம்

134. ஆகமங்களின் வேறு பெயர் :

a) வைக்காந்ஸா ஆகமா
b) பஞ்சரட்ரா ஆகமா
c) ஸ்ரௌதா ஆகமா
d) வைஷ்ணவா ஆகமா

135. வேத இலக்கியம் இப்படி பிரிக்கப்பட்டுள்ளது :

a) வேதா மற்றும் வேதாங்கா
b) அறிவு மற்றும் ஸ்ருதி
c) பிரம்மன் மற்றும் கடவுள்
d) இதில் எதுவும் இல்லை

136. ரிக், யசுர், சாமம் மற்றும் அதர்வணம் எல்லாம் :

a) வேறு வேறு சம்ஹிடாஸ்
b) வேறு வேறு உபநிடதம்
c) வேறு வேறு பிராமணங்கள்
d) இதில் ஏதும் இல்லை

137. பத்தாம் திருமுறையாக வகைப்படுத்தப்பட்டுள்ள பாடல் :

a) திருமந்திரம்
b) பெரியபுராணம்
c) திருவாசகம்
d) திருக்கோவையார்

[ Turn Over

138. சாங்கியாவின்படி, மஹத், அஹங்காரம், ஐந்து தன்மாத்திரங்கள் :

a) காரணங்கள் b) காரியங்கள்

c) இரண்டும் d) எதுவும் இல்லை

139. வேள்வியின் பொழுது கடவுளின் இருத்தலையும் பங்குகொள்ளுவதையும் வேண்டி, கடவுளை புகழ்ந்து பாசுரங்களைப் படிக்கும் ஒருவரை குறிப்பிடுவது :

a) உத்கதா b) ஹோதா

c) அத்வர்யு d) பிரம்மா

140. 'ரபாஸயகோபா' என்பவர் :

a) இந்திரன் b) சூரியன்

c) அக்னி d) வருணன்

141. பட்டியல் I மற்றும் பட்டியல் IIஐ பொருத்தி சரியான விடை காண்க :

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| a) | காமதேவன் | 1. | செழுமையின் கடவுள் |
| b) | குபேரன் | 2. | மதி கடவள் |
| c) | புஷன் | 3. | செல்வத்திற்கான கடவுள் |
| d) | அனுமதி | 4. | அன்பிற்கான கடவுள் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 4 | 2 | 1 | 3 |
| b) | 4 | 3 | 1 | 2 |
| c) | 2 | 3 | 1 | 4 |
| d) | 1 | 4 | 2 | 3 |

142. "மகர சங்கராந்தி" அன்று வரும் பண்டிகை :

a) தீபாவளி b) ஹோலி

c) ரக்ஷாபந்தன் d) பொங்கல்

www.winmeen.com

143. கீழ்கண்டவற்றில் சரியானவற்றை பொருத்துக :

a) பாலிதீபிகம் — 1. ஒரு நிலையில் ஒரு கடவுளை உயர்வாகக் கருதும் நிலை

b) ஹெறனோதீபிகம் — 2. ஒரு கடவுள் மீது நம்பிக்கை

c) மானோதீபிகம் — 3. ஒரு பரம்பொருள் மீது நம்பிக்கை

d) மானிசம் — 4. பல கடவுள்கள் மீது நம்பிக்கை

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| a) | 4 | 1 | 2 | 3 |
| b) | 3 | 4 | 1 | 2 |
| c) | 4 | 2 | 1 | 3 |
| d) | 2 | 1 | 3 | 4 |

144. கீழ்கண்டவற்றில் சரியானவற்றை பொருத்துக :

<u>சித்தர்</u> — <u>வாழ்ந்த இடம்</u>

a) பாம்பாட்டி சித்தர் — 1. திருவரங்கம்

b) போகர் — 2. திருக்கழுக்குன்றம்

c) குதம்பை சித்தர் — 3. திருக்கடவூர்

d) சட்டைமுனி — 4. பழனி

| | *a* | *b* | *c* | *d* |
|---|---|---|---|---|
| a) | 4 | 2 | 3 | 1 |
| b) | 1 | 3 | 2 | 4 |
| c) | 3 | 4 | 2 | 1 |
| d) | 2 | 1 | 4 | 3 |

145. சாங்கியாவின்படி பரிணாமத்திற்கு நோக்கம் உண்டு :

1. புருடனின் மகிழ்வுக்கு

2. புருடனின் வீடுபேறுக்கு

a) 1 சரி

b) 2 சரி

c) இரண்டும் சரி

d) இரண்டும் சரியில்லை

[ Turn Over

146. கீழ்க்கண்ட சித்தர்களை அவர்களின் மரபுகளால் பொருத்துக :

| | சித்தர் | மரபு |
|---|---|---|
| a) | போகர் | 1. செம்படவர் |
| b) | மச்சமுனி | 2. ஓதுவார் |
| c) | வாமதேவர் | 3. வேடர் |
| d) | வான்மீகர் | 4. சீனதேசக் குயவர் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 1 | 4 | 3 | 2 |
| b) | 3 | 2 | 4 | 1 |
| c) | 2 | 3 | 1 | 4 |
| d) | 4 | 1 | 2 | 3 |

147. திருமூலருக்கான கோயில் அமைந்துள்ள ஊர் :

a) திருநீர்மலை
b) திருவாவடுதுறை
c) திருவண்ணாமலை
d) திருவிடைமருதூர்

148. "காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே" பாடலை எழுதியவர் :

a) திருநாவுக்கரசர்
b) அருணகிரிநாதர்
c) தாயுமானவர்
d) பட்டினத்தார்

149. 'நவரத்தின வைப்பு' என்ற நூலை எழுதியவர் :

a) சட்டைமுனி
b) அலகுனி சித்தர்
c) கொங்கண நாயனார்
d) அழகுனி சித்தர்

150. 'ஒன்றே குலம், ஒருவனே தெய்வம், உள்ளமே கோயில், ஆதிமலயிப்பே தேவானந்தம்' என்ற உன்னதத் தத்துவத்தை கூறியது :

a) திருப்புகழ்
b) திருவந்தாதி
c) சிவவாக்கியம்
d) சிவபுராணம்

151. கருவூராரின் பாடல்கள் உள்ள நூல் :

a) திருவருட்பயன்
b) திருவந்தாதி
c) திருக்களிற்றுப்படியார்
d) திருவிசைப்பா

152. கீழ்வருவனவற்றுள் சரியானவற்றை பொருத்துக :

a) ஜீவன்
b) பிரக்ருதி
c) ஆதாரம்
d) சேஷ

1. ஜடம்
2. ஆதேயம்
3. சேஷி
4. அணு

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 1 | 3 | 4 | 2 |
| b) | 4 | 1 | 2 | 3 |
| c) | 3 | 2 | 1 | 4 |
| d) | 1 | 4 | 3 | 2 |

153. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் குடும்ப தெய்வம் :

a) இராமன்
b) அனுமான்
c) கிருஷ்ணா
d) இவற்றில் எதுவுமில்லை

154. சுவாமி விவேகானந்தரின் கூற்றுப்படி உலகளாவிய சமயத்தின் முக்கிய சொல் :

a) தன்னலமற்ற தொண்டு
b) சமரச இணக்கம்
c) ஏற்றுக்கொள்ளுதல்
d) முழுநிறைவான வீடுபேறு

155. சிவபிரகாசரின் வழி :

a) உயிர்கள் எண்ண முடியாதனவாகி உள்ளன.
b) உயிர்கள் எண்ணக்கூடியவை.
c) உயிர்கள் எண்ணவும், எண்ண முடியாதவையும் ஆக உள்ளன.
d) இவற்றில் எதுவுமில்லை.

156. கீழ்கண்டவற்றில் சரியானவற்றைப் பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| a) | சரியை | 1. | சற்புத்திரமார்கம் |
| b) | கரியை | 2. | தாசமார்கம் |
| c) | யோகம் | 3. | சன்மார்கம் |
| d) | ஞானம் | 4. | சகமார்கம் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 1 | 3 | 4 | 2 |
| b) | 2 | 1 | 4 | 3 |
| c) | 2 | 4 | 3 | 1 |
| d) | 1 | 4 | 2 | 3 |

157. சித்தாந்தம் என்ற சொல்லின் பொருள் :

a) இறுதி முடிவு

b) உயர்ந்த நம்பிக்கை

c) முடிந்த முடிவு

d) மேற்கூறியவை எல்லாம்

158. தாயுமானவரைப் பாராட்டிய இரட்டையர் :

a) வள்ளலாரும் மறைமலையடிகளாரும்

b) பட்டினத்தாரும் வள்ளலாரும்

c) பட்டினத்தாரும் அருணகிரிநாதரும்

d) அருணகிரிநாதரும் மறைமலையடிகளாரும்

159. சிவஞானபோதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் :

a) ஹாய்சிங்டன், பையட் பாதிரியார், நல்லசாமிப் பிள்ளை, டேவிட் நவமணி மற்றும் சிவபாதசுந்தரம்

b) பையட் பாதிரியார், போப் பாதிரியார், ஹாய்சிங்டன், நல்லசாமிப் பிள்ளை மற்றும் டேவிட் நவமணி

c) ஹாய்சிங்டன், டேவிட் நவமணி, சிவபாதசுந்தரம், பையட் பாதிரியார் மற்றும் தாமஸ் பாதிரியார்

d) டேவிட் நவமணி, போப் பாதிரியார், ஹாய்சிங்டன், சிவபாதசுந்தரம் மற்றும் பையட் பாதிரியார்

160. நாச்சியார் திருமொழியை எழுதியவர் :

a) திருமங்கை ஆழ்வார்
b) ஆண்டாள்
c) பொய்கை ஆழ்வார்
d) மேலே குறிப்பிட்ட எவருமிலர்

161. பட்டினத்தாரின் தந்தை :

a) சுப்ரமண்ய செட்டியார்
b) அழகப்ப செட்டியார்
c) சிதம்பரநாதன் செட்டியார்
d) சிவநேசன் செட்டியார்

162. கீழ்கண்ட பாடலைப் பாடியவர் :

"நட்டகல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்டசட்டி சட்டுவம் கவிச்சுவை அறியுமோ?"

a) அருணகிரிநாதர்
b) பட்டினத்தார்
c) சிவவாக்கியர்
d) பாம்பாட்டிச் சித்தர்

163. திருமூலர் எழுதிய நூல் :

a) திருப்புகழ்
b) திருவந்தாதி
c) திருமந்திரம்
d) திருவாசகம்

164. கன்னட இடையர் :

a) கொங்கணர்
b) கொரக்கர்
c) சட்டநாதர்
d) சுந்தரனந்தர்

165. 'கோயில் நான்மணிமாலை'யின் ஆசிரியர் :

a) தாயுமானவர்
b) அகப்பேய் சித்தர்
c) பட்டினத்தார்
d) அருணகிரிநாதர்

166. "குதம்பை" என்ற சொல்லின் பொருள் :

a) காதணியைக் குறிக்கும்
b) காதணி அணிந்த பெண்ணைக் குறிக்கும்
c) இரண்டையும் குறிக்கும்
d) எதையும் குறிக்காது

[ Turn Over

167. கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் எது பிரதிட்டை கிரியையின் சரியான தொடர்?

a) குடமுழக்கு - அட்டபந்தனம் - ஸ்பர்சாகுதி
b) அனுஞ்சை - கணபதி பூஜை - வாஸ்து சாந்தி
c) பிம்பசுத்தி - யாகசாலை - கலாகர்ஷணம்
d) கும்பத்தாபனம் - காப்பு கட்டு - முளையீடு

168. இராமனுஜர் ஒப்புக்கொள்வது :

1. ஜீவன் முக்தி
2. விதேஷ முக்தி
3. க்ரம முக்தி
4. எதுவும் இல்லை

a) 2 மட்டும் சரி
b) 1-ம் 2-ம் சரி
c) 2-ம் 3-ம் சரி
d) 4 மட்டும் சரி

169. வியூகம் என்பது கீழ்காணும் வடிவக் குழுக்கள் :

1. வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்னன், அனிருத்தன்
2. அச்யுதன், அனந்தன், கோவிந்தன்
3. கேசவன், நாராயணன், கோவிந்தன்
4. தாமோதரன், கிருஷ்ணன், வாசுதேவன்

a) 1 மட்டும் சரி
b) 1-ம் 2-ம் சரி
c) 1, 2, 3, 4 சரி
d) 1-ம் 4-ம் சரி

170. அப்ருதக் சித்தி என்றால் :

a) ஆன்மாவையும் கடவுளையும் பிரிக்க இயலாது
b) ஆன்மா தனித்தியங்குகின்ற தன்மையுள்ளது
c) கடவுள் சார்ந்து வாழ்பவர்
d) ஆன்மாவையும் உலகத்தையும் பிரிக்க இயலாது

171. யமுனாச்சாரியாரின் வேறு பெயர் :

a) இராமானுஜர்
b) ஆளவந்தார்
c) நாதமுனி
d) பெரிய நம்பி

172. சரியான வரிசையைத் தேர்ந்தெடு :

a) ஆஸ்தான மண்டபம், கோபுரம், பலிபீடம், நந்தி, சிவன்

b) கோபுரம், ஆஸ்தான மண்டபம், பலிபீடம், நந்தி, சிவன்

c) சிவன், நந்தி, கோபுரம், ஆஸ்தான மண்டபம், பலிபீடம்

d) சிவன், பலிபீடம், ஆஸ்தான மண்டபம், நந்தி, கோபுரம்

173. புராணகாலத்து சமையல் வல்லுனர் :

a) அர்ஜுனனும் சகாதேவனும்

b) பீமனும் பாஞ்சாலியும்

c) நளனும் சகாதேவனும்

d) நளனும் பீமனும்

174. சங்கு, சக்கரம், வாள், வில், கோதண்டம் ஆகிய ஐந்து ஆயுதங்களை உடைய கடவுள் :

a) முருகன்

b) சிவன்

c) கொற்றவை

d) திருமால்

175. வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடியவர் :

a) மாணிக்கவாசகர்

b) திருஞானசம்பந்தர்

c) அப்பர்

d) வள்ளலார்

176. வள்ளலார் கூற்றுப்படி தலையாய அறம் என்பது :

a) பசி நீக்குதல்

b) கொல்லாமை

c) இச்சை இல்லாமை

d) இவை அனைத்தும்

177. கீழ்க்கண்ட உரைகளை ஆய்க :

1. அம்சுமான் - இறைவன் போதித்தது

2. மகுட - மனிதன் உருவாக்கியது

எந்த உரை / உரைகள் சரியானது?

a) 1 மட்டும் சரி

b) 2 மட்டும் சரி

c) 1-ம் 2-ம் சரி

d) 1-ம் இல்லை 2-ம் இல்லை

[ Turn Over

178. கீழ்கண்ட வேதங்களில் ஒன்றுபற்றி கீதையில் எந்த குறிப்பும் காணப்படவில்லை?

a) ரிக்
b) யஜுர்
c) சாம
d) அதர்வண

www.winmeen.com

179. கீழ்கண்ட குழுவில் சேராத ஒன்று :

a) அர்த்தநாரிஸ்வரர்
b) சரபேஸ்வரர்
c) ஹரியார்த்த மூர்த்தி
d) தட்சிணமூர்த்தி

180. மாத்துவரின்படி, உலகத்தின் முதல் காரணம் :

a) மாயா
b) ப்ரகிருதி
c) கடவுள்
d) ஆன்மா

181. "பிரதித்ய சமுத்பாதக் கோட்பாட்டை" உள்ளடக்கியது :

a) புத்தரின் முதல் போதனை
b) புத்தரின் இரண்டாவது போதனை
c) புத்தரின் மூன்றாவது போதனை
d) புத்தரின் நான்காவது போதனை

182. பிரமா என்பதின் பொருள் :

a) ஏற்புடைய அறிவு
b) சந்தேகத்திற்குரிய அறிவு
c) பொய்யான அறிவு
d) இவற்றில் எதுவுமில்லை

183. திருஞானசம்பந்தர் இறைவனை அடைய கூறும் செயல் :

a) கானகம் செல்ல வேண்டும்
b) பட்டினி கிடக்க வேண்டும்
c) உள்ளம் உருகி அழ வேண்டும்
d) பாட்டுப் பாட வேண்டும்

184. பத்தாம் நூற்றாண்டில் ஆழ்வார்களின் பாசுரங்களை தொகுத்தவர் :

a) நம்மாழ்வார்
b) ஆண்டாள்
c) நாதமுனி
d) ஸ்ரீ ஆளவந்தார்

185. கீழ்காணும் இணைகளை கவனித்து அதில் எந்த இணை சரியாக இணைக்கப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடி?

1. திருமந்திரம் - திருமூலர்
2. 1, 2, 3 திருமுறைகள் - அப்பர்
3. பெரியபுராணம் - சேக்கிழார்

a) 1-ம் 2-ம் சரி
b) 2-ம் 3-ம் சரி
c) 1-ம் 3-ம் சரி
d) 3 மட்டும் சரி

186. இராமானுஜ தத்துவத்தின்படி, செறிபொருள் பிரளய காலத்தின் அழைக்கப்படும் முறை :

1. சத்துவம்
2. ராஜசம்
3. தாமசம்
4. இவை எல்லாம்

a) 1 மட்டும் சரி
b) 1-ம் 2-ம் சரி
c) 3 மட்டும் சரி
d) 4 மட்டும் சரி

187. சுத்த அத்வைதத்தை அளித்தவர் :

a) ஆதிசங்கரர்
b) வல்லபாச்சாரியார்
c) சைதன்யர்
d) இராமகிருஷ்ணர்

188. நவ பதார்த்தங்களை ஆன்மாவின் பரிமாணங்களாக வகைப்படுத்தி எடுத்துரைப்பது :

a) சைவம்
b) வைணவம்
c) ஆரிய சமாஜம்
d) சமணம்

189. பௌத்த மதத்தின் வேதநூல் :

a) குருகிரந்த சாஹேப்
b) திரிபீடகம்
c) ஞானேஸ்வரி
d) ஆத்ம போதம்

190. சாங்கியத செனத்தின் உண்மைப் பொருள் :

a) பிரகிருதி
b) புருடன்
c) இரண்டும்
d) எதுவுமில்லை

[ Turn Over

191. கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருந்தக்கூடிய இணை எது?

a) அண்டம் - முட்டையில் தோன்றுவன : பறவை, ஊர்வன, நீர் வாழ்வன

b) சுவேதஜம் - கருப்பையில் தோன்றுவன : மனிதரும், விலங்குகளும்

c) உத்பிஜ்ஜம் - ஆகாயத்தில் தோன்றுவன : நட்சத்திரம், நிலா, சூரியன்

d) சராயுஜம் - வேர்வையில் தோன்றுவன : கிருமி

192. இவற்றில் எதனை ஜிர்ணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் என்று அழைக்கப்படுகிறது?

a) அநாவர்த்தம்

b) ஆவர்த்தம்

c) புநராவர்த்தம்

d) அந்தரிதம்

193. சாத்வீக மனிதனுடைய குணங்கள் கீழ்கண்டவற்றில் ஒன்று இல்லை :

a) பற்றில்லாத நிலை

b) ஆணவமற்ற நிலை

c) உறுதித் தன்மை

d) உணர்ச்சிக்கு உட்பட்ட

194. கீழ்க்கண்டவற்றுள் எது சரியான முறையில் பொருத்தப்பட்டுள்ளது?

a) நாகரம் - பெண் விமானம்

b) திராவிடம் - அலி விமானம்

c) வேசரம் - ஆண் விமானம்

d) ஸ்தூல லிங்கம் - கோபுரம்

195. கீழ்க்கண்டவற்றுள் அட்டவணை I-ஐ II-உடன் சேர்த்து சரியானவற்றை தேர்ந்தெடு :

| அட்டவணை I (வேதங்கள்) | அட்டவணை II (உபநிடதங்கள்) |
|---|---|
| a) ரிக் வேதம் | a) கேன உபநிஷத் |
| b) சாம வேதம் | b) முண்டக உபநிஷத் |
| c) யஜுர் வேதம் | c) கௌசிகதக்கி உபநிஷத் |
| d) அதர்வண வேதம் | d) மகாநாராயண உபநிஷத் |

196. கௌசிக தக்கி உபநிடத்தில் குறிப்பிட்டுள்ள 'எதா கர்மா எதா வித்யம்' என்ற பதத்தின் பொருள் :

a) ஒரு ஆன்மா தன்னுடைய அறிவு மற்றும் செயல் அடிப்படையில் வரும் ஜென்மத்தில் பிறவி எடுக்கும்.

b) ஒரு ஆன்மா தான் பெற்ற பணம் அடிப்படையில் வரும் ஜென்மத்தில் பிறவி எடுக்கும்.

c) ஒரு ஆன்மா தான் பெற்ற புண்ணிய வினையின் அடிப்படையில் மட்டும் ஜென்மத்தில் பிறவி எடுக்கும்.

d) ஒரு ஆன்மா தான் பெற்ற பாவ வினையின் அடிப்படையில் மட்டும் வரும் ஜென்மத்தில் பிறவி எடுக்கும்.

197. கடவுளிடம் இணைய சுவாமி விவேகானந்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யோகாவை பொருத்தவும் :

| | | |
|---|---|---|
| a) | கர்ம யோகா | 1. அறிவு வழியாக |
| b) | சக்தி யோகா | 2. பக்தி மற்றும் பாசம் வழியாக |
| c) | ராஜ யோகா | 3. வேலை மற்றும் கடமை வழியாக |
| d) | ஞான யோகா | 4. மனக்கட்டுப்பாட்டின் வழியாக |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| a) | 1 | 2 | 4 | 3 |
| b) | 1 | 4 | 3 | 2 |
| c) | 3 | 2 | 4 | 1 |
| d) | 3 | 1 | 2 | 4 |

198. இவற்றில் எது சரியானவை?

I. சைவ தத்துவம் : சிவம், சக்தி, சதாசிவம், மகேஷ்வரன், ருத்ரன்

II. வைஷ்ணவ தத்துவம் : முருகன், பாலன், ஆலன், விமலன்

a) I மட்டும் சரி

b) II மட்டும் சரி

c) I-ம் II-ம் சரி

d) இவற்றில் எதுவுமல்ல

[ Turn Over

199. கடவுளின் அருளால் ஆன்மா கரணத்தை அடைகிறது. அது குறிப்பிடுவது :

a) பூதங்கள் ஐந்து, கர்மேந்திரங்கள் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, தன் மாத்திரை ஐந்து, அந்தகரணம் நான்கு.

b) பிராணன், அபானன், வியானன்

c) இடைகலை, பிங்கலை, சுழுமுனை

d) குரோதம், லோபம், மோகம், மதம்

www.winmeen.com

200. இவற்றில் எது ஆலய நிர்மாணங்களல்லாதது :

a) ஆவர்த்தம்

b) அநாவர்த்தம்

c) அனுஞ்ஞை

d) புநராவர்த்தம்